செ.வெ.எண்-19 நாள்-11.10.2019

# பத்திரிக்கைச் செய்தி

பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் விவசாயிகளுக்கு எதிர்பாராமல் ஏற்படும் இழப்புகளுக்கு நிதியுதவி வழங்கி பாதுகாக்கவும், பண்ணை வருவாயை நிலைப்படுத்தவும் மற்றும் அதிநவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதை ஊக்குவிக்கவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் பயிர் காப்பீடு செய்யும் விவசாயிகளுக்கு மகசூல் இழப்பிற்கு ஏற்றவாறு பயிர் இழப்பீட்டு தொகை சம்பந்தப்பட்ட பயிர்காப்பீட்டு நிறுவனத்தால் வழங்கப்படும்.

நடப்பு 2019-20-ம் ஆண்டு ராபி பருவம் சிறப்புப்பட்டத்தில் சம்பா நெல் பயிர் (Paddy II), மக்காச்கோளம் II மற்றும் பருத்தி II பயிர்களுக்கு பயிர் காப்பீடு செய்ய அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி அரியலூர் மாவட்டத்தில், சம்பா நெல் பயிருக்கு 180 வருவாய் கிராமங்களும், மக்காச்சோளம் II பயிருக்கு 78 வருவாய் கிராமங்களும் மற்றும் பருத்தி பயிருக்கு 71 வருவாய் கிராமங்களும் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன.

இந்த திட்டத்தில் கடன் பெறும் விவசாயிகள் அவர்கள் கடன் பெரும் வங்கிகளில் கட்டாயமாகப் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் பதிவு செய்யப்படுவார்கள். கடன் பெறாத விவசாயிகள், பொது சேவை மையங்கள் மூலமாகவோ தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் வணிக வங்கிகள் மூலமாகவோ விருப்பத்தின் பேரில் பதிவு செய்து கொள்ளலாம்.

இந்த திட்டத்தில் சம்பா நெல் (Paddy II) பயிரிடும் விவசாயிகள் பதிவு செய்ய டிசம்பர் மாதம் 15-ம் தேதி கடைசி நாள் ஆகும். இதர பயிர்களான மக்காச் சோளம் II மற்றும் பருத்தி II பயிரிடும் விவசாயிகள் பதிவு செய்ய அக்டோபர் மாதம் 31-ம் தேதி கடைசி நாள் ஆகும். நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் பயிர் சாகுபடி செய்ய இயலாத விவசாயிகள் முன்னதாகவே கிராம நிர்வாக அலுவலரிடம் பயிர் செய்ய உள்ளதற்கான சான்று பெற்று விண்ணப்பிக்க வேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்கு பின் பயிர் காப்பீடு செய்பவர்களுக்கு இழப்பீட்டு தொகை வழங்கப்படமாட்டாது. மேலும், பயிர் வாரியாக அறிவிக்கை செய்யப்பட்ட கிராமங்களில் உள்ள விவசாயிகள் மட்டுமே இத்திட்டத்தில் பயன்பெற இயலும்.

எனவே விவசாயிகள் இறுதி நேர நெரிசலை தவிர்க்கவும், விவசாயிகளின் விண்ணப்பங்கள் விடுபடாமல் இருக்கவும், பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் காப்பீட்டுத் தொகை செலுத்தி தங்களது பயிர்களை முன்கூட்டியே பதிவு செய்ய கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பயிர் காப்பீடு செய்ய சம்பா நெல் (Paddy II) பயிருக்கு பிரிமியத் தொகையாக ஒரு ஏக்கருக்கு ரூ.488-ம், மக்காச்சோள பயிருக்கு (Maize II) ரூ.335-ம், பருத்தி II பயிருக்கு ரூ.1365-ம், காப்பீட்டுக் கட்டணமாக செலுத்தினால் போதுமானது.

அரியலூர் மாவட்ட விவசாயிகள் இத்திட்டத்தின்கீழ் பதிவு செய்யும் போது முன்மொழிவு விண்ணப்பத்துடன், பதிவு விண்ணப்பம், கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் அடங்கல், வங்கிக் கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல், ஆதார் அட்டை நகல் ஆகியவற்றை இணைத்து பிரிமியத் தொகையை செலுத்தியபின் அதற்கான ரசீதையும் பொது சேவை மையங்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் பெற்றுக் கொள்ளலாம். மேற்கண்ட திட்டங்கள் தொடர்பாக எழும் சந்தேகங்களுக்கு சம்பந்தப்பட்ட வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகி பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**